## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

# இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு

# பதவி வெற்றிட அறிவித்தல்

**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவானது குறைந்த வருமானம் பெறுவோருக்காக சட்ட உதவி வழங்கும் நோக்கில் 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்ட உதவி சட்டத்தின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட சட்ட நிறுவனமாகும். கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**01. பதவி: உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் வகுப்பு ii (நிர்வாகம்) வெற்றிடம் – தலைமை காரியாலயம் – 01**

**தகைமைகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் அல்லது சமூக விஞ்ஞானம் அல்லது முகாமைத்துவம் அல்லது மனிதவள முகாமைத்துவம் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் அத்துடன் பட்டம் பெற்றதன் பின்னர் அரச, அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபை என்பவற்றில் குறித்த துறையில் முகாமைத்துவ மட்ட பதவியில் குறைந்தது 05 வருட அனுபவம் பெற்றிருத்தல்.
2. 2026.05.01 ஆம் திகதிக்கு வயது 32 வருடங்களுக்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
3. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
4. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல்.
5. தனது பதவிக்குரிய பொறுப்பை திறமையாக நிறைவேற்ற வேண்டியதோடு இலங்கையின் எப்பாகத்திலும் பணி புரிவதற்கான உடல் உள ஆரோக்கியத்துடன் இருத்தல்.

**தகைமைகள் (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு) (கீழே 1ஆம் அல்லது 2ஆம் தகைமையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்)**

1. மேலே வெளிவாரி விண்ணப்பதாரிகளின் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.
2. JM 1-1 சேவை மட்டத்திற்குரிய 1 ஆம் தர பதவியில் 02 வருட திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

**தொழிலின் பொறுப்பு**

கொள்கை தயாரிப்பு, கட்டளையிடுதல், முகாமைத்துவம் மற்றும் அது தொடர்பில் தீர்மானம் எடுத்தல் உள்ளிட்ட, நிறுவனத்தின் உயர்மட்ட கட்டளை உத்தியோகத்தருக்கான கடமையில் பகுதியளவில் மேற்கொள்ளப்படும் கடமைகளில் நிறுவனத்தின் உயர்மட்ட கட்டளை உத்தியோகத்தரின் கடமைகளை இலகுபடுத்தும் வகையில் பதவிக்கு விசேடமாக வழங்கப்படும் கடமைகள்.

**சம்பள அளவு**

MM 1-3 Rs.96,650/= 10x2480, 15x3450=173,200/= + முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + EPF/ETF

**02. பதவி: உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் வகுப்பு ii (வெற்றிடம் – 01) தலைமை காரியாலயம் – 01**

**தகைமைகள் (வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு) (கீழே 1ஆம் அல்லது 2ஆம் தகைமையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு, நிதி அல்லது வணிக நிர்வாகம், வணிக அல்லது கணக்கியல் துறையில் பட்டம் பெற்றிருத்தல்.
2. அங்கீகரிக்கப்பட்ட பட்டய நிறுவனத்தில் இடைநிலை பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
3. 2026.05.01 ஆம் திகதிக்கு வயது 22 வருடங்களுக்கு குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
4. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
5. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல்.
6. தனது பதவிக்குரிய பொறுப்பை திறமையாக நிறைவேற்ற வேண்டியதோடு இலங்கையின் எப்பாகத்திலும் பணி புரிவதற்கான உடல் உள ஆரோக்கியத்துடன் இருத்தல்.

**தகைமைகள் (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு) (கீழே 1ஆம் அல்லது 2ஆம் தகைமையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்)**

1. மேலே வெளிவாரி விண்ணப்பதாரிகளின் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ உதவியாளர்-தொழிநுட்பம் சாராத (MA 1-2) சேவையின் ii ஆம் தரத்தில் குறித்த துறையில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

**தொழிலின் பொறுப்பு**

நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவ தரத்தில் உள்ளவர்களின் கடமை பொறுப்புகளுக்கு உதவும் வகையில் விசேடமாக முகாமைத்துவ / சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் வழங்கப்படும் கணக்காய்வு, நிர்வாக மற்றும் நிதி முகாமைத்துவ கடமைகள்.

**சம்பள அளவு**

JM 1-1 Rs.72,650/- 10x1360, 18x2040=122,970/= + முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + EPF/ETF

**03. பதவி : முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) வகுப்பு iii (வெற்றிடம் – 01) தலைமைக் காரியாலயம் – 01**

**தேவையான தகைமைகள்**

1. தொழில் மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தொழில்நுட்பத் துறையின் தேசிய தொழிற் தகைமை (NVQ) 05 ஆம் மட்டத்திற்குக் குறையாத மட்டத்திலான திறன் சான்றிதழ் பெற்றிருத்தல்.
2. உள்ளக விண்ணப்பதாரிகளும் மேற்குறித்த தகைமையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. 2026.05.01 ஆம் திகதிக்கு வயது 18 க்கு குறையாமலும் 45 க்கு அதிகரிக்காமலும் இருப்பதோடு இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
4. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
5. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல்.
6. தனது பதவிக்குரிய பொறுப்பை திறமையாக நிறைவேற்ற வேண்டியதோடு இலங்கையின் எப்பாகத்திலும் பணி புரிவதற்கான உடல் உள ஆரோக்கியத்துடன் இருத்தல்

**தொழிலின் பொறுப்பு**

சட்ட உதவி ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறையில் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) பதவிக்குரிய அனைத்து பொறுப்புக்களும்.

**சம்பள அளவு**

MA 2-2 (50,540/-10x540-7x630-4x1080-20x1280 – 90,270/-)+ முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + EPF/ETF

**04. பதவி : முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாராத) iii ஆம் தரம் (வெற்றிடங்கள் 03) மேல் மாகாணம் – 02, கிழக்கு மாகாணம் – 01**

**தேவையான தகைமைகள்**

1. கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தர பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் போன்ற பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.
2. 2026.01.01 ஆம் திகதிக்கு வயது 18 க்கு குறையாமலும் 45 க்கு அதிகரிக்காமலும் இருப்பதோடு இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
3. கல்விப் பொது தராதரப் பத்திர உயர் தர பரீட்சையில் குறைந்தது மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும். (பொது பரீட்சை தவிர்ந்து) உள்ளக விண்ணப்பதாரிகள் சேவையில் நிரந்தரமாகியிருத்தல் வேண்டும் அத்தோடு, குறித்த பதவி நிரந்தரமாக்கப்பட்ட ஆரம்ப நியமனத்தின் கீழ் உள்ள தரப்பினரில் 05 வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.
4. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
5. தன் பதவிக்கு விதிக்கப்படும் காரியங்களை சிறப்பாக நிறைவேற்றக்கூடியவராகவும், இலங்கையின் எப்பிரதேசத்திலும் பணி புரிவதற்கான உடல் மற்றும் உள தகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
6. கணனி சம்பந்தமாக சிறந்த அறிவு உடையவராக இருத்தல் வேண்டும். (சிங்களம்/தமிழ் /ஆங்கிலம்)

**தொழிலின் பொறுப்பு**

நிறுவனத்தின் கட்டளை மற்றும் நிர்வாக மட்ட உத்தியோகத்தர்கள் கடமைகளுக்கு உறுதுணையாக இருப்பது அல்லது ஒத்துழைப்பது, தொழில்நுட்ப தன்மை அல்லாத இதனுள் அடங்கும். இக் கடமைகளுக்குள் நியமன அதிகாரி மூலம் விஷேடமாக குறித்துரைக்கப்படும் கடமைகள் இச் சேவை மட்டத்திற்குரிய உத்தியோகத்தர்களின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**சம்பள அளவு**

MA 1-2 (46,220-10x540-7x630-12x1080-12x1280 – 84,350/-)+ முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + EPF/ETF

மேலே குறிப்பிடப்பட்ட சகல பதவிகளுக்கும் இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் வினைதிறன் தடைகாண் பரீட்சைக்கு குறிப்பிட்ட காலத்தில் தோற்றுதல் வேண்டும்.

**05. பதவி : சாரதி iii ஆம் தரம் – ஆரம்ப (PL-3) (வெற்றிடங்கள் 02) மேல் மாகாணம் – 02**

**தேவையான தகைமைகள்**

1. கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தர பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.
2. மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். குறித்த சாரதி அனுமதிப்பத்திரத்தில் முச்சக்கர வண்டி மற்றும் கனரக வாகனம் செலுத்துவதற்கான அனுமதி பெற்றிருப்பதோடு, சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றதன் பின்னர் 03 வருட அனுபவம் பெற்றிருத்தல்.
3. 2026.01.01 ஆம் திகதிக்கு வயது 18 க்கு குறையாமலும் 45 க்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும்.
4. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
5. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
6. தன் பதவிக்கு விதிக்கப்படும் காரியங்களை சிறப்பாக நிறைவேற்றக்கூடியவராகவும், இலங்கையின் எப்பிரதேசத்திலும் பணி புரிவதற்கான உடல் மற்றும் உள தகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**தொழிலின் பொறுப்பு**

நிறுவனத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அடிப்படை தேவைகளான நிர்மாணம், பராமரிப்பு, பழுதுபார்த்தல் போன்ற அடிப்படை தேவைகளுள்

தொழில் மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய தொழிற் தகைமை (NVQ) 04 மட்டத்திலான தொழில்நுட்ப பயிற்சி சான்றிதழ் / திறன் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படும் தொழில்நுட்ப / திறன் / தொழிற் தகைமைகள் தேவைப்படும் கடமைகளுக்காக நியமிக்கப்படும் நபர்களின் மற்றும் போக்குவரத்து கடமைகளின்போது தேவைப்படும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் கொண்டுள்ளவர்களின் சேவை பிரிவில் உள்ளடங்கும்.

**சம்பள அளவு**

PL 3 (43,280-10x490-10x540-10x590-12x630 – 67,040/-)+ முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + EPF/ETF

**06. பதவி: அலுவலக உதவியாளர் iii ஆம் தரம் (வெற்றிடங்கள் 26) மேல் மாகாணம் – 11, கிழக்கு மாகாணம் – 04, மத்திய மாகாணம் – 03, சப்ரகமுவ மாகாணம் – 03, வடமேல் மாகாணம் – 02, தென் மாகாணம் – 02, ஊவா மாகாணம் – 01**

**தேவையான தகைமைகள்**

1. கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண தர பரீட்சையில் தோற்றியிருத்தல் வேண்டும்.
2. 2026.01.01 ஆம் திகதிக்கு வயது 18 க்கு குறையாமலும் 45 க்கு அதிகரிக்காமலும் இருப்பதோடு இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
3. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
4. தன் பதவிக்கு விதிக்கப்படும் காரியங்களை சிறப்பாக நிறைவேற்றக்கூடியவராகவும், இலங்கையின் எப்பிரதேசத்திலும் பணி புரிவதற்கான உடல் மற்றும் உள தகுதி உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
5. சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

**தொழிலின் பொறுப்பு**

நிறுவனத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பகுதியளவான திறன் அல்லது திறன் நுட்பமன்றி செய்ய முடியுமான கடமைகள் வழங்கப்படும் பல்கடமை சேவை தரத்தில் இது உள்ளடங்கும். இந்த பதவிக்குரிய கடமைகளுள் எந்த வகையான கடமைகளையும் நிறுவனத் தலைவர் / நியமன உத்தியோகத்தரால் விதிக்க முடியும்.

**சம்பள அளவு**

PL 1 (40,500-10x450-10x490-7x540-15x590 – 62,530/-)+ முகாமைத்துவ சேவை திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள் + EPF/ETF

(எழுத்துமூல பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் பின்னரே ஆட்சேர்ப்பு செய்யப்படும்)

(மேலே குறிப்பிடப்பட்ட சகல பதவிகளுக்கும் இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர் வினைதிறன் தடைகாண் பரீட்சைக்கு குறிப்பிட்ட காலத்தில் தோற்றுதல் வேண்டும்)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பும்போது, அரச, அரச கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபைகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். அத்தோடு "2026 மே மாதம் 29 ஆம் திகதிக்கு" முன்னர் கீழ் காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் தங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடவும்.

**முகவரி:**

**தவிசாளர்,**
**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு,**
**இலக்கம் 129,**
**மேல் நீதிமன்ற கட்டிடத் தொகுதி,**
**புதுக்கடை, கொழும்பு - 12**